(6) நடைமுறைக் கேள்வி

ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்து உறுப்பினர்கள் 42-வது விதியின் கீழ் அறிவிக்கை கொடுத்திருக்கும்போது, அதே பொருள் குறித்து அமைச்சர் 82-வது விதியின் கீழ் முன்னதாக, அறிக்கை அளிக்கலாமா என்பது குறித்து.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of order, Sir . . . .

MR. DEPUTY SPEAKER: No point of order.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When we give the same matter under Rule 42 motion, the members are given an opportunity for discussion . . .

MR. DEPUTY SPEAKER: May I tell you that as far as the Chair is concerned, no such motion has been received.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I have just given an adjournment motion regarding this matter. It must have been received.

MR. DEPUTY SPEAKER: It has not yet been received.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I have given it about half an hour before. When Hon. Ministers are asked to make such statements, you completely take away the right of the members for discussion on the subject. Under Rule 82, there can be no discussion on the subject. But under Rule 42, there is an opportunity for discussion and we can discuss about how you are going to rectify it and how you are going to solve the problem.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இரண்டு விதமான வாதங்கள் உண்டு. சபை நடந்து கொண்டிருக்கிறது. நான் ஸ்தலத்திற்கு நேரிலே போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அங்கே காயம் பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். மாலையிலே பத்திரிகைகளிலே வந்துவிடப் போகிறது. உடனடியாக ஏன் சபைக்குச் சொல்லவில்லையென எழுப்பவீர்களென்று சொல்கிறேன். நீங்கள் தனியாக விவாதிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். இப்பொழுதைக்கு இரண்டாவதை விட்டுவிட்டு முதல் வாதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

1975 நவம்பர் 11]

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த 82-வது பிரிவை நல்ல முறையிலே பயன்படுத்தியிருக்கிறார் அமைச்சர். அது பாராட்டத் தக்கது. ஆனால், நம்முடைய 82-வது பிரிவிலே, அதன் பேரில் விவாதம் இல்லையென்று போட்டிருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட சம்பவம் வருகிறபொழுது மறுநாள் ஏதாவது விவாதிக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அந்த முறையிலே விதிகளைத் திருத்தலாம் அல்லது தாங்களே டைரக்ட் பண்ணலாம்.

MR. DEPUTY SPEAKER: It is only proper that the Hon. Minister has made a statement at the appropriate time. Therefore, thert is nothing wrong in it. There is no question of taking away any of the rights of the hon. Members. If the members want to have a discussion on the matter, they may raise it tomorrow by any other means.

4. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் (தொடர்ச்சி).

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மின்சார வாரிய நிதிநிலை மதிப்பீட்டை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாக செங்கம் தாலுகா இருந்து வருகிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களும் என்னுடைய தொகுதியிலே இருக்கின்றவர்களும் பெரும்பாலும் முழுக்க முழுக்க விவசாயத்தையே தொழிலாகக் கொண்டு நடத்தி வருகிறார்கள். எஸ்.இ.ஆஃபீசுக்குப் போகவேண்டுமென்றால் காட்பாடிக்குப் போகவேண்டியிருந்த நிலை மாறி இன்றையதினம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தைத் திருவண்ணாமலையிலே வைக்கக் காரணமாக இருந்த வாரியத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.